**ஹபராதுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 ஆந் திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஹபராதுவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 102,510 தொகைக்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா 399,960 தொகைக்கான விளையாட்டு உபகரணங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 5,019,194 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | அஹுங்கம பழைய வர்த்தக கட்டடத் தொகுதியில் இருந்து பெறவேண்டிய ஒரே முறையில் பெறவேண்டிய பணம் ரூபா 74,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தளபாடங்களும் பொருத்துக்களும் மற்றும் இயந்திரங் களும் இயந்திர உபகரணங்களின் பெறுமதியினுள் ரூபா 81,270 தொகைக்கான 09 நுகர்வுப்பொருள் விடயங்கள் உட்படுத்தப்பட்டிருந்தன. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 3,806,981 இற்கான வித்தியாசம் ஒன்று காட்டப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணப்படும் சமமின்மைகளை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 601,430 தொகைக்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை இனங்கண்டு கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கினை பாதித்துள்ள காரணங்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **பெறவேண்டிய கணக்குகள்** | | |
| | பல வருட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டு வரப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 1,329,705 தொகைக்கான 05 பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

| | | |
|---|---|---|
| 2011 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 8,862,715 தொகைக்கான 05 செலுத்த வேண்டிய கணக்கு விடயங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளை தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் தீர்ப் பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 155,092,290 தொகைக்கான 11 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகள் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், காலப் பகுப்பாய்வும் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர் பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் அட்டவணைகள் தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எழுத்தாணை வழங்கப்பட்டு நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) விதி 145 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக விரிவான கூற்றொன்று தயாரிக்கப்பட்டு பேரேட்டில் காட்டப்பட்டு மீதிகளுடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் விதியின் பிரகாரம் செயற்பட்டு சரி செய்வேன். |
| (iii) விதி 193 | பாதீட்டுடன் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் விதியின் பிரகாரம் செயற்பட்டு சரி செய்வேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 371 | உத்தியோகத்தர்களுக்கு 2019 ஆண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 161,159 தொகைக்கான முற்பணங்கள் மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது செலுத்தியிருந்த ரூபா 446,108 தொகைக்கான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |
| (ii) நிதிப் பிரமாணம் 396(ஈ) | • பொதுக் கணக்கிலிருந்து வழங்கியிருந்த கொடுப்பன விற்காக சமர்ப்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலத்தை மிகைத்துள்ள ரூபா 413,109 தொகை பெறுமதியான 15 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |
| | • நிர்மாண வேலைக் கணக்கு தொடர்பாக 2017 ஆண்டின் போது வைப்புச் செய்யப் பட்டிருந்த ரூபா 96,265 இற்கான தேறாத காசோலைகள் தீர்க்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) நிதிப் பிரமாணம் 571(1)(2) | 02 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 1,018,550 தொகைக்கான 74 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |
| (iv) நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |
| (இ) பொதுநிர்வாக சுற்றறிக்கைகள் | | | |
| (i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக் கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபைக்குச் சொந்தமான ஒன்பது வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவேன். |
| (ii) 2015 ஜுலை 10 திகதிய 02/2015 இலக்கங் கொண்ட திறைசேரிச் செயலாளரின் மற்றும் நிதியமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான சிதைவுற்ற 08 வாகனங்கள் அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 11,841,892 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு் ரூபா 4,416,009 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| **வங்கி இணைக்கக்கூற்றுக்கள் தயாரித்தல்.** | | |
| **(i) பொதுக் கணக்கு** | | |
| 2013 ஆண்டில் காசாளரின் பெயருக்கு ரூபா 48,750 தொகை மிகையாக எழுதப்பட்ட காசோலை, 2014 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 13,398 தொகைக்கான வங்கியில் குறைவாக வைப்புச் செய்தல், 2013 ஆண்டின் போது தவறுதலாக சுற்றாடல் கணக்கு வருமானம் ரூபா 72,385 தொகை பொது கணக்கிற்கு செலவு வைத்தல் மற்றும் 2015 ஆண்டு முதல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த இனங்காணப்படாத ரூபா 76,989 தொகைக்கான வருமானங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | வங்கி இணைக்கக் கூற்றுக்கள் சரியாக தயாரிப்பதற்கும் மற்றும் அரசாங்கப் பணம் தவறாக பயன்படுத்தல் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் பரிசோதனை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ii) நிர்மாண வேலைக் கணக்கு** | | |
| நிர்மாண வேலை கணக்கின் வருமானம் ரூபா 13,000 தொகை தவறுதலாக சுற்றாடல் கணக்கிற்கு செலவு வைக்கப் பட்டிருத்தல் மற்றும் 2017 ஆண்டின் போது வைப்புச் செய்யப்பட்ட தேறப்படாத காசோலைகளின் பெறுமதியாகிய ரூபா 96,265 தொகையினை தீர்த்திருக்கவில்லை. | வங்கி இணைக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பரிசோதனை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 மதிப்பீட்டு வருமானம் | 2019 சிட்டையிடப் பட்ட வருமானம் | 2019 சேகரிக்க ப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 திகதி யில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையி டப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்க ப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 திகதி யில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,377,000 | 4,181,895 | 3,664,093 | 8,579,689 | 4,071,700 | 3,755,197 | 3,097,984 | 8,061,887 |
| வாடகை | 12,470,000 | 4,952,865 | 5,678,250 | 564,442 | 26,840,000 | 20,886,239 | 7,935,640 | 1,289,827 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 6,034,870 | 482,000 | 482,900 | 51,300 | 7,824,850 | 432,850 | 431,650 | 52,200 |
| | 23,881,870 | 9,616,760 | 9,825,243 | 9,195,431 | 38,736,550 | 25,074,286 | 11,465,274 | 9,403,914 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,385,082 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 169,812,512 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் சேகரிக்கப்பட்டு வருகின்றது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகளுக்காக மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் சுமார் 08 தொன்கள் கழிவுப் பொருட்களை வகைப் படுத்தாமல் ஹபராதுவ லியனகொட விகாரைக்குச் சொந்தமான காணியொன்றில் குவிக்கப்பட்டு மண்ணினால் மூடப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,792,430 தொகை செலவிடப்பட்டிருந்தது. | நீண்ட காலத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | நீண்ட காலத் திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |
| (ii) 2019 ஆண்டின் போது குப்பை முகாமைத்துவத்திற்கு தீர்வொன்றாக சபை நிதியத்தில் இருந்த ரூபா 5,846,498 தொகை செலவிடப்பட்டு உயிர்வாயு அலகொன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப் பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 29 திகதியளவில் செயற்பாட்டு அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு உத்தேசித்திருந்த போதிலும் இந்த செயற்திட்டம் இரண்டாம் கட்ட நிர்மாண வேலை மட்டத்தை மாத்திரம் நெருங்கியிருந்து. | நிர்மாண வேலைகள் விரைவு படுத்தப்பட வேண்டும். | நிர்மாண வேலைகள் விரைவுபடுத்தப்படும் என அறிவிக்கின்றேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **வருமானம் அறவீடு செய்யாமை** | | |
| (அ) அஹங்கம பொது வர்த்தக கட்டடத்தொகுதியில் 10 கடையறைகள் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வாடகைக்கு கொடுக்கப் பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதி வரை திறக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) அஹங்கம பொது வர்த்தக கட்டடத்தொகுதியில் வாடகைக்கு கொடுத்திருந்த 77 கடையறைகளில் ஒரே தடவையில் பெறப்படும் பணம் ரூபா 17,055,200 தொகை மற்றும் வாடகை ரூபா 410,149 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஹபராதுவ பொது வர்த்தகக் கட்டடத்தொகுதியில் 17 கடையறை களில் இருந்து 2019 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 212,800 தொகையாகும். | எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | ஜோவி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை 2018 ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் மூடப்பட்டிருந்தது. அச் சிற்றுண்டிச்சாலையில் இருந்து குத்தகையாக ரூபா 158,256 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இந்தத் நிலுவைத் தொகையை அறவீடு செய்வது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் சிற்றுண்டிச்சாலையின் திறப்பை மீண்டும் சபைக்கு பெறுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (i) | இரண்டாம் தர மற்றும் ஆரம்ப தர 20 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | அத்தியவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இற்கு அமைவின்றி சேர்க்கப்பட்டிருந்த 16 பிரதியீட்டு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் வழங்குவதற்காக 2019 ஆண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 3,276,654 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | தொழிலாள ஊழியர் 12 பேர் அலுவலக கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | முறைப்பிரகாரம் பதவிகளுக்கு அமைவாக பொறுப்புக்கள் சாட்டப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்த 15 ஊழியர்கள் 2019 ஆண்டின் போது மேலதிக நேர படியாக ரூபா 715,521 தொகை பெற்றிருந்தனர். | முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்** | | |
| ஜோவி சிறுவர் பூங்காவினை சபைக்கு உரித்தாக்கும் சந்தர்ப்பத்தில் சிறுவர் நூலகத்தில் காணப்பட்ட 1269 புத்தகங்கள் பொருட் பதிவேட்டில் பதியப்படாமல் இருந்ததுடன், முன்னைய ஆண்டுகளின் போது நடாத்தப்பட்ட பண்டக் கணிப்பீடுகளின் போதும் இந்தப் புத்தகங்கள் சமர்பிக்கப் பட்டிருக்கவில்லை. | உரிய முறையில் பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். |

**3.5 பெறுகைகள்**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டிற்காக பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையாக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள் ளப்பட்டிருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டி ருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு வலுபடுத்தப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்வதற்கு போதியளவு பதவியணியினர் காணப்படவில்லை. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறைப்படி குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |